நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42 ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No. 456/2022

<u>அ.த.சா: 1 (LW–1) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பைசில் ரஹ்மான் | சாதி | : | |
| தந்தை பெயர் | : | பசீர் அஹமத் | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | 30 |

07–08–2024 நாளன்று 1969 ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது
––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

<u>முதல் விசாரணை:</u>

நான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ரிக்ஷா கடை வாகனம் பழுதுபார்க்கும் கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி குமரேசன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 22.12.2020 அன்று எங்கள் தெருவை சேர்ந்த சின்ன ராவுத்தர் என்பவர் மரணம் அடைந்துவிட்டார். 23.12.2020 அன்று அவரை அடக்கம் செய்வதற்காக ஜமாத்தை சேர்ந்தவர்கள் அனைவரும் எங்களுடைய அடக்கஸ்தலமான மஞ்சகாவி மில் எதிர்புறம் உள்ள இடத்திற்கு சென்று குழிதோண்டி அடக்கம் செய்வதற்கு வேண்டிய வேலைகளை செய்து கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி குமரேசன் சுமார் 10 நபர்களை தன்னுடன் அழைத்துவந்து அந்த இடத்தில் குழிதோண்ட கூடாது என்றும், அடக்கம் செய்யக்கூடாது என்று சொல்லி எங்களை தேவிடியா மகனே என்றும், துலுக்க பயலே என்றும் அசிங்க அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். இங்கு அடக்கம் செய்தால் உங்களை கொலைசெய்துவிடுவேன் என்று சொல்லி கொலைமிரட்டல் செய்தார். அதனால் காவல் நிலையம்சென்று புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> – இல்லை

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.*

K KAVITHA

Digitally signed by K KAVITHA
Date: 2024.08.07 18:10:07 +0530

Chief Judicial Magistrate,
Theni.